26.02.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

**OS.166/2023**

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | | |
| த/பெ | கோவிந்தன் | | |
| கிராமம் | சாந்திநகர் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 62 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம். | தேதி | |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன், நான் சொன்ன விபரம் அடிப்படையில் நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் படித்துப்பார்த்தேன் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன். 06.12.2019ந் தேதியில் வாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் நகல் வா.சா.ஆ.1 ஆகும். 19.01.2023ந் தேதியில் வாதியும், பிரதிவாதியும் சேர்ந்த ஏற்படுத்திக்கொண்ட குடியிருப்பு கட்டுமான ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ. 2 ஆகும். 19.01.2023ந் தேதியில் பிரதிவாதிக்கு, வாதி வழங்கிய காசோலை நகல் வா.சா.ஆ. 3 ஆகும். பிரதிவாதி கட்டிய கட்டுமான போட்டோக்கள் எண்ணிக்கை 4 வா.சா.ஆ. 4 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணை இல்லை.**